## எல்லாம் உன் அருளே இறைவா

எல்லாம் உன் அருளே இறைவா எல்லாம் உன் கொடையே - ( 2 )
நான் இருப்பதும் என் இயக்கமும் நான் மலர்வதும் உன்னில் மறைவதும்
நான் பெற்றுக் கொள்ளாததில்லை - இங்கு
நீயின்றி நானேதுமில்லை - ( 2 )
என் தேவனே எல்லாம் நீ தந்தது என் தேவை நிறைவேற சரணாகுது

**1)**
இந்தப் பூமியில் நான் வாழ்வதும் உடலும் உள்ளமும் நலமாவதும்
சொந்த உறவுகள் நான் காண்பதும்பாசங்களில் நான் மகிழ்வதும் -2
அருளாலே நான் பெற்ற வாய்ப்பு - உன்
அன்பாலே நான் பெற்ற அழைப்பு -(2)
என் தேவனே எல்லாம் நீ தந்தது என் தேவை நிறைவேற சரணாகுது

( எல்லாம் உன் அருளே )

**2)**
என்னைத் தேர்ந்ததும் என்னில் சேர்ந்ததும் எங்கெங்கும் நான் காணும் எழில்களும்
என் திறமைகள் என் உரிமைகள் நீதியில் நான் கொண்ட காதலும் -2
உன்னோடு நான் கொள்ளும் உறவும் இவ்வுலகோடு நான் கொள்ளும் பரிவும்
என் தேவனே எல்லாம் நீ தந்தது என் தேவை நிறைவேற சரணாகுது

( எல்லாம் உன் அருளே )